ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

मृतं शरीरमुत्सृज्य काष्ठलोष्ठसमं भुवि ।
विमुखा बान्धवा यांति धर्मं तमनुगच्छति ॥

பந்து ஜனங்கள் மரணத்தையடைந்த நம் சரீரத்தை கட்டை ஓடு இவைகளுக்குச் சமனுக வெண்ணி பூமியில் எறிந்துவிட்டுத் திரும்பிக் கூடப்பாராமல் போகிறுர்கள். நம்மால் செய்யப்பட்ட தர்மமோவென்றுல் அக்காலத்திலும் நம்மை பின் தொடருகிறது.

நம்முடைய மனம், வாக்கு, சரீரம் இவற்றுல் மிகவும் சிரமப்பட்டுத்தேடிய பொருளால் நம் வாழ்நாட்கள் பூராவும் விசேஷமான உபகாரங்களைப் பெற்றவர்களும், நம்மிடம் அதிக அபிமானத்தைப் பாராட்டும் நம்பந்துஜனங்கள் யாவரும் இச்சரீரத்திலிருந்து பிராணவாயு என்கிற காற்று வெளியில் கிளம்பியவுடன் முன் அதிக அபிமானத்திற்குப் பாத்திரமாய் வைத்திருந்த இந்த தேகத்தை, உபயோகமில்லாமல் கண்டவிடங்களில் கிடக்கும் செங்கல் துண்டு, கட்டை முதலியவைகளைப் போல் மிகவும் அனுவசியமென்று வெளியில் தூரத்தில் எறிந்துவிட்டுத் திரும்பி அந்த இடத்தை மறுபடியும் பார்த்தால் தங்களுக்குப் பெரிய ஆபத்து நேரிடுமென்று பயந்து அந்தப்பக்கம் நோக்காமலேயே சென்றுவிடுகிறுர்கள். இவ்விதம் ஆபத்துக்காலத்தில் நம்மை பந்துக்கள் பாதுகாப்பார்களென்று நம்பியிருக்க, சகலபந்து ஜனங்களாலும் கைவிடப்பட்டுத் தனியாய் வேறு சகாயமின்றிப் பரலோகஞ் செல்லுங்கால் பயம் வேண்டாம், நான் வருகிறேன் கூட ! என்று அவரவர்களால் செய்யப்பட்ட தர்மமானது பிரியத்துடன் கூடவே சென்று அங்கு தன்னுல் செய்யக்கூடிய உபகாரத்தைச் செய்கின்றது என்று ஓர் ஸ்மிருதியில் கூறியுள்ளார். ஆகையால் தற்காலத்தில் நம்மிடம் அபிமானம் பாராட்டுகிறவர்களே எந்தசமயத்திலும் சகாயமாயிருப்பார்கள் என்று நம்பி மோசம் போகாமல் நம் ஆபத்துக்காலத்தில் பாதுகாக்கக் கூடிய தர்மத்தைக் கைவிடாமல் இயன்றவரையில் அனுஷ்டித்து வந்தால் சிரேயஸ்ஸை அடையலாம்.

ஸம்ஸ்கிருத பாஷாபி விருத்தி

மிகவும் பெயர்பெற்ற ஜெர்மனி (Germany) தேசத்துப் பிரதிகூலவாதி (German Pessimist) யாகிற ஷோபன்ஹாரின் (Schopenhauer) சிறந்த வாக்கியங்களனேகருக்குத் தெரிந்திருக்கக்கூடும். உபநிஷத்துக்களைக் குறித்துப் பேசும்போழுது "உபநிஷத்துக்களைப்போலோத்த அவ்வளவு நன்மையைத்தரத் தக்கவும் உன்னதஸ்திதிக்குக் கொண்டுவரக் கூடியவுமான படிப்பு உலகில் வேறொன்றுமில்லை. என்னுடைய வாழ்நாட்களுக்கு அது ஒரு ஆறுதலாயிருந்தது. நானிறந்து போகும் பொழுதும் அது ஆறுதலாகவேயிருக்கும்'' என்று கூறுகின்றார்

(2) பலஸம்ஸ்கிருத நூற்களை ஆங்கிலத்தில் தர்ஜமா (ரெவியூ) செய்திருக்கும் ஸர். வில்லியம் ஜோன்ஸ் (Sir william Jones) என்னும் மேனாட்டு நிபுணரும், "வேதாந்தசாஸ்திரத்தையும் அதற்கனுகுணமாக ஏற்பட்டிருக்கும் பல வடமொழிக் கிரந்தங்களையும் நன்கு ஆராயுமிடத்து கிரீஸ் (Greece) தேசத்து பிராசீன தத்துவக்ஞர்களாகிய பைதாகோரூஸ், ப்ளேடோ (Pythogoras Plato) என்பவர்கள் இப்பரதகண்டத்து மகரிஷிகளிடமிருந்து தான் விஷயங்களை கிரஹித்திருப்பார்களென்று சொல்ல நேரிடுகின்றது'' என உரைக்கின்றார். இக்கருத்தையே ஸர்வில்லியம் டெம்பிள்(Sir william Temple)என்னும்ஆங்கில நிபுணர் "புராதனக்கல்வியும்நூதனக்கல்வியும்''என்றவியாஸத்திலும்(An Essay upon the Ancient & the Modern Learning) தற்காலவித்வானான மார்வின் (F. S. Marvin) "பழமையின் அழிவின்மை'' (The Living Past) என்ற புத்தகத்திலும் நன்கு வெளியிட்டுள்ளார்கள்.

(3) பிரான்ஸ் (France) தேசத்தில் தர்சனங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்திருப்பவருள் மிகவும் மேன்மை பெற்றவரென விளங்கும் விக்டர்கஸின் (Victor Cousin) என்பவர் 1828-வது வருடத்தில் ஓர் பெரிய ஜனக்கூட்டத்தின் முன்பு தான் செய்த பிரஸங்கத்தில், கீர்வாணபாஷையிலெழுதப்பட்ட புராதனமான நம்காவியங்களையும் சாஸ்திரங்களையும் பற்றிப்பின் வருமாறு புகழ்கின்றார்:—"முக்கியமாய் இப்பொழுது ஐரோப்பாவில் வியாபிக்கவாரம்பித்திருக்கும் இந்து தேசகாவியங்களையும், சாஸ்திரங்களையும் நன்கு கவனித்து வாசிப்போமாகில் அவற்றினின்றும் பலவுண்மைகள் வெளியாகின்றனவென்பதிற் சிறிதும் ஐயமில்லை. மிக்கவுயர்வுள்ள அவ்வுண்மைகளை யுற்றுநோக்கின்,ஐரோப்பியவித்வத்சிகாமணிகளின் ஆராய்ச்சிகளெல்லாம் அல்பமானவைகளாகவே யாகும். ஆகவே தத்துவவிஷயத்தில் அவர்களுக்கு நாம் தலைவணங்கவேண்டும். இதனால் இந்த அதிப்பிராசீனமான பாரதநாட்டுப் புதல்வர்களிடம் மிகவும் மேன்மை தங்கிய தத்வசாஸ்திரங்கள் குடிகொண்டிருந்தனவென்று நன்கு புலப்படுகின்றது" என்றார்.

(4) அமெரிக்கா ஸாமுவெல் ஜான்ஸனும் (Samuel Jonson) இந்துக்கள்போல் அத்தியாத்மவழியில் சென்றவர்கள் ஒருவருமில்லையென்று, வெகுகாலத்திற்கு முந்தியே ஆத்மவிசாரணை செய்தவர்கள் இவர்களொருவரே யென்றும், இவர்களுடைய வேதாந்தகிரந்தத்திற்கு துல்யமானது இவ்வுலகிலில்லை யென்றும், இதனால் இதரமதங்களுடைய குறைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாமென்றும் நன்கு விளக்கியுள்ளார்.

(5) ஜர்மனிதேசத்தில் ஆதியில் ஸம்ஸ்கிருதம் படித்தவர்களுள் முதன்மைபெற்ற ப்ரெரிக் (Frederick Schlegel) என்பவர் அவருடைய புஸ்தகத்தில் எழுதுவதாவது:—"வெகு நாட்களுக்கு முன்னரே இந்தியர்கள் பரப்பிரும்மத்தின் மெய்ஞானத்தை யறிந்தனரென்பதற்குச் சிறிதும் தடையேயில்லை, ஸம்ஸ்கிருதபாஷை யிலெழுதப்பட்ட அவர்களின் கிரந்தங்க

ளிலெல்லாம் மிகவும் உத்தமமானதும் ஸ்பஷ்டமானதுமான சொற்சுவையும் பொருட்சுவையும் காணப்படுகின்றது. வெகு தூரம்வரை கடவுளைமனதால் சிந்தித்து மானிடர்களுக்கெட்டிய வாக்கால் எவ்வளவுபயபக்தியுடன் கூறமுடியுமோ அவ்வளவு இவற்றுள்சொல்லப்பட்டிருக்கின்றது. இந்நூற்களுடன் ஐரோப்பியர்களின் மிகச்சிரேஷ்டமான கிரந்தங்களை சீர்தூக்கிப் பார்க்குமளவில் திவ்யஒளியுடன் நடுப்பகலில் விளங்கும் கதிரவன்முன்பாக ஓர் சிறியதீபம் போல், பலங்குன்றி மிகத்தீனமான வெளிச்சத்துடன் கூடினதாயும் ஒவ்வொரு வினாடியும், அணைந்துபோவதற்குத் தயாராகவுள்ளதாகவும் அவைகள் தோன்றுகின்றன." என்று நமது புராதன இந்துக்களின் ஸம்ஸ்கிருத நூல்களைப் பற்றி சிலாகிக்கின்றார்.

(6) மேற்சொல்லிய ஜர்மனிய தேசத்திலேயே "ப்ரொபஸர் டியூஸன் (Professor Denssen) என்னும் ஓர்வித்வான் வடமொழியிலெழுதப்பட்ட வேதாந்தசாஸ்திரத்தின் மகிமையைப் பலர் மூலமாய்க் கேள்வையுற்று அதைத்தானாகவே வாசித்தறிந்து கொள்ள வேண்டுமென்றே ஸம்ஸ்கிருதத்தையப் பியாஸஞ்செய்ததாகவும் தானே அதைப்படித்து அதன் பிரதானத்தைத் தெரிந்துகொண்டபிறகு அந்த சாஸ்திரத்திற்குப் பாத்தியஸ்தர்களான ஆரியர்களை நேரில்பார்த்து ஸகவாஸஞ் செய்ய வேண்டுமென்ற பேரவாவுடன் இந்தியாவிற்கு யாத்திரை செய்து வந்ததாகவும் சரித்திரத்தில் காண்கின்றோம்.

(7) இவ்வாறு வடமொழியைப்பற்றியும், அதிலெழுதப்பட்டுள்ள கிரந்தங்களைப்பற்றியும், பற்பல மேனாட்டு நிபுணர்களினபிப் பிராயங்களைப் பற்றி முழுவதும் எழுதுவதென்றால் அதிகம் விரியுமாதல்பற்றி, அவர்களுள் மிகப்பிரபலமான மாக்ஸ்முல்லர் (Maxmuller) அபிப்ராயத்தை மாத்திரம் கூறி நிறுத்திக்கொள்கின்றோம். இவர் பெயரை சிலர் (मोक्षमूलभट्टाचार्यः) மோக்ஷமூலர் என்று சொல்லி, அவர் தனக்கு ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள அத்யந்த அபிமானத்தைக்காண்பிக்க இப்

பெயரை வைத்துக்கொண்டாரென்றும் "மோக்ஷமுல்லர்" என்ற பதத்திற்கு மோக்ஷத்தின் மூலத்தைக் கொடுக்கிறார்கள்.

मोक्षस्य + मूलं + रातीति = ददातीति

என்று அர்த்தஞ்செய்கின்றார்கள். இந்த மாக்ஸ்முல்லர் (Max muller) "ஷோப்பன்ஹார்" சொல்லியதெல்லாம் தன்னபிப்பிராயத்திற்கு மிகவும் ஒத்திருப்பதாகச் சொல்லுவதுடன் உபநிஷத்துக்கள் அனைத்தையும் வெகு பிரயாசப்பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார். பிராமணமதத்திற்குமுக்ய வாஸஸ்தானமாயும், பௌத்ததேசத்திற்கு ஜன்மபூமியாகவு மிருக்குமிப்பாரத தேசத்தைத்தவிர வேறு எங்கு மதத்தின் சுவபாவத்தையும் உண்மையையும் அறியலாமெனக் கேட்கின்றார். சுருக்கிச்சொல்லுங்கால், புராதனமானஸம்ஸ்கிருதபாஷையிலும் அதனால் வெளியிடப்பட்ட மதசம்பந்தமான பல அரிய நூல்களிலும் மிகப்பற்றுள்ள அந்த மஹாவித்வானவர், அவைகளுக்குப்பிறப்பிடமான நமது இந்திய நாட்டை பூலோகத்திலுள்ள சுவர்க்கமென வழங்குகின்றார்.

தொடரும்

உ.

கடவுள் துணை.

மாணவர் கூட்டுறவுச் சங்கம்.

(௩எகூ-வது பக்கத்தொடர்ச்சி.)

இம்முறை மாணவர்களிடையே பரவுவதும் மிக எளிதானது. ஏனெனில், அவர்கள் அனைவரும் சற்றேறக் குறைய ஒரே வயதினர்; ஒரே வேலையிலிருப்பவர்; ஒரே இடத்தில் பழகுபவர்; ஒரே நோக்கத்துடன் முயலுபவர். அன்றியும், இப்பருவம் தான் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் வன்மை வாய்ந்தது ; உண்மை ஐக்கியவாதிகளுக் கிருக்க வேண்டிய பிரிக்க முடியாத நட்பை வளர்ப்பது; ஒற்றுமை, உழைப்பு

ஒருவருக் கொருவர் உதவிசெய்து கொள்ளுதல் முதலிய உயர்ந்த குணங்களைவேரூன்றச் செய்வது. மேலும், தங்களுக்கு வேண்டியவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வதிலும், கைக்கொள்வதிலும் அவர்களுக்கு ஏதும் தொல்லையில்லை. இதுவும் ஐக்கிய வியாபாரத்துறையில் பழகுவதற்கு அவர்களுக்கு எளியதாகின்றது. ஆதலின், மாணவர்களுக்கு கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றைப் பழக்கிக்கொள்ளும் இடமே உலக விடுதலைக்காதாரமான சர்வ வல்லமையுள்ள கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்களைக் கற்றுக்கொள்வதற்கும், தங்களது பிற்கால வாழ்க்கைக்குத் தேவையான தொழில் முறைகளைக் கற்றுக் கொள்வதற்கும் தகுந்ததோர் இடமாகின்றது.

கூட்டுறவாளி ஒருவகைப் பூர்த்தியான கருத்தினைக் கொண்டவர்; உயரிய நோக்கத்தினையும் உடையவர். அன்றியும், பொதுஜனங்களுக்கு வேண்டிய பல நன்மைகளையும்பற்றி உண்மையாக ஆங்காங்கு சென்று விரித்துரைத்து அனைவரையும், இன்பமுறத்தூண்டிவருபவர்; அவர்களது குணத்தைப் பெருக்கி மனதைப் பரிசுத்தப்படுத்துவதையே தமக்குரிய தொழிலாகக் கொண்டிருப்பவர். இத்தகைய உயரிய குணம் செயல்களையுடையவர் நமது மாணவர்களினின்றும் தோன்ற வேண்டியது அவசியமல்லவா ? தோன்ற முடியாதா ? தோன்றமாட்டார்களா ? அவசியந்தான்; தோன்றவும் கூடும், தோன்றவும் தோன்றுவர்.

மாணவர்கள் என்ன செய்ய வேண்டும் ?

ஒவ்வொரு மாணவனும் தான் படிக்கும் கலாசாலையிலே ஒரு மாணவர் கூட்டுறவுச்சங்கம் இருந்தால் உடனே அதிற் சேரவேண்டும். இல்லாதிருந்தால் உடனே நட்பாளர்களுடன் சேர்ந்து ஒரு சங்கத்தை ஏற்படுத்தவேண்டும். சங்கத்தின் நன்மையையும், வளர்ச்சியையும் கருதி ஒவ்வொரு கூட்டத்திற்கும் தவறாது போதல்வேண்டும். சங்கத்தில் நாணயமாக நடந்துகொள்ளல்வேண்டும். ஆசையை உண்டுபண்ணக்கூடிய

எவ்வளவு லாபத்தைக் காட்டியபோதிலும் வெளிக்கடைக் காரர்களிடம் தங்களுக்குவேண்டியவற்றை வாங்காமலும், தங்களுக்காக ஏற்பட்ட சங்கத்தார் தங்கள் அனைவருடைய நன்மையின் பொருட்டு வாங்கி வைத்திருப்பவற்றையே வாங்கியும்வரல்வேண்டும். சங்கத்தின் பொதுநன்மை நிதியையும், க்ஷேமநிதியையும் எவ்வளவு பெருக்கப் பார்க்கலாமோ அவ்வளவும் பெருக்கப் பார்த்தல் வேண்டும். தனித்த அங்கத்தினர் விஷயமாகவும், சங்கத்தின் விஷயமாகவும் ஆராய்ச்சி நேர்ந்தால், அக்கால், நடுநிலை பிறழாது சங்கத்தின் நன்மையை நாடுவதிலேயேகண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். குறுகியநோக்கமின்றிப் பெருந்தன்மையாயிருக்கவேண்டும்.

ஆதலின், மாணவர்களே, உலகம் முழுவதும் தோன்றி வருகின்ற கூட்டுறவு இயக்கத்தைக் கூர்ந்து நோக்குங்கள். ஆங்காங்கு தோன்றும் சங்கங்களையும், அவை செய்துவரும் நன்மைகளையும் பாருங்கள். அவற்றின் வரலாற்றை அறியுங்கள். உங்களது தாய்நாடு இருக்கும் சீர்கேட்டையும், அது நன்னிலையைப் பெறுதற்கான வழியையும் சிந்தியுங்கள். அஃது இக்கூட்டுறவு இயக்கமே என்பதை உணர்வீர்கள். அதனோடு அந்த இயக்கத்தைப்பரப்பி அழியாது நிலைபெறச் செய்ய வல்லது உலகத்தை ஒன்றுபடுத்தக்கூடிய வன்மை வாய்ந்த இத்தகைய சிறு சங்கங்களாகிய மாணவர் கூட்டுறவுச் சங்கங்களே என்பதையும் உணர்வீர்கள். உணர்ந்தவாறே உறுதியுடன் ஒன்றுபட்டால்உண்டுவாழ்வு என்பதைக்கடைப்பிடித்து உழைப்பீர்களானால் தவறாது நீங்களும், உங்கள் நாடும் உலகமும் உயர்நிலைபெறுவது ஒருதலை. சுபம்.

ஊ. சா. வெங்கட்டராமய்யர்.

ஸ்ரீ மடம் கல்வி அபிவிருத்தி.

(௩அச வது பக்கத்தொடர்ச்சி.)

பிரும்மசாரி கற்க வேண்டியது.

(1) தன்சாகை அத்யயனம் (2) நான்குபாஷைகள்—(க) தேவ (வேத) பாஷை—ஸம்ஸ்கிருதம். (உ) பேசும் பாஷை—தமிழ் (௩) பொது பாஷை—ஹிந்தி (ச) ராஜபாஷை—இங்கிலீஷ், கற்கவேண்டும். (3) கணிதம்—மேல்நாட்டுக் கணிதமுறை, நாட்டுக் கணக்கு முறை, கடைக் கணக்கு முறை, லீலாவதி என்ற ஸம்ஸ்கிருதகணக்கு, இவை அறியவேண்டும். (4) உலகக்ஞானம் பூகோளசரித்திரம் பிருகிருதி சாஸ்திரம் மேல் நாட்டு சாஸ்திரம் தர்மசாஸ்திரம் இவைகளில் பரிசயம் செய்ய வேண்டும். (5) ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை அர்த்தத்துடன் தந்த்ரமும் அநுஷ்டானமும் செய்ய அறிந்துகொள்ள வேண்டும். (6) கடைசியில் வேதாந்தக் ஞானம் (7) தனிசாஸ்த்ரப் பரிசயம் செய்தல் (8) ஒரு தொழில் நன்கு செய்யப்பழகல் வேண்டும். (9) உடல் வலுவுக்கு உதவியாக சரீர அப்பியாச முறைகளும் ப்ராணாயாம முறையும் அநுஷ்டானம் செய்ய வேண்டும்.

ஆச்ரமம் ஏற்படுத்துவது யார்?

முதலில் பிராம்மணர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக தங்கள் ஊரில் ஏற்படுத்தவேண்டியது தான். இங்கிலீஷ் படித்து விட்டு உத்யோகம் கிடைக்காமல் தீண்டாப் பிள்ளைகளைக்கண்ட பின்னும், இங்கிலீஷ்கவர்ன்மெண்டார் பிராம்மணர்களுக்கு உத்யோகமில்லை யென்று பறையறைந்து பிரகாசப்படுத்திய பிறகும் பிராம்மணர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கிலீஷ் பள்ளிகளுக்கு அனுப்பிப் பிள்ளைகளைப் பள்ளிகளாக்குவதைப்பார்த்து பித்ருதேவதைகள் ஸகிப்பார்களா? உங்கள்தர்ப்பணத்தாலும் சிரார்த்தத்தாலும் உங்கள் பித்ருக்கள் திருப்தி அடைவார்களா ஹோ! பிராம்மணர்களே!! யோஜியுங்கள்,

ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தான்.

பெருந்தீயிடைப்பட்ட மலைப்பாம்பு தன் அழிவு அறிந்தும் இடம் விட்டு நகராது அத்தீயின் வாய்ப்பட்டு மாண்டுபோம் தன்மை போல் பிராம்மணர்கள் தங்கள் அழிவை நேரில் பார்த்தும் அறியார்கள். இவர்கள் மனம் கல்லாகிவிட்டது. 100க்கு 99-பிள்ளைகள் தலையில் அலங்காரக் குடுமிகளிட்டு ஸ்னான ஸந்திகளை விட்டு பெற்றோர்களை இகழ்ந்து பெண்டிர்வசப்பட்டு தீவினையால் பொருள்தேடி அதர்மகாரியங்களில் ஆழ்ந்து கிடக்கும் ரிஷித்ரோகிகளானதைக் கொண்டே இன்னும் களிப்பு வேண்டியிருக்கிறதோ! பலவாறு சொன்னாலும் பலன் ஏற்படாது.

அவதார புருஷன் போன்றவர்களே இக்கார்யம் ஆரம்பிக்கவேண்டும். ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் உலகத்தைப் புரட்டி சமண பௌத்தமதங்களை பிறந்த இடமிருந்து பிடுங்கி, மஹாஉன்னதமான ஹிமயமலைக்கு அப்பால் செல்லும்படி வீசி எறியும்படி எவ்வளவு பலம் கொண்டிருந்தார். இந்த பலத்தில் பதினாயிரத்தில் ஒருபாகம் இருந்தால் இந்த பிரும்மசர்யாலயஸ்தாபனத்துக்குப்போதும். தற்காலம் ஸ்ரீகாஞ்சீகாமகோடிபீடத்தை அலங்கரிக்கும் ஸ்வாமிகள் அவர்கள் ஓர் அவதாரம்என்றே பல மஹாபுருஷர்கள் நினைப்பதால் இந்த மஹாஸங்கடகாலத்தில் இந்த ஸ்வாமிகளே இறங்கி வேலைசெய்து பூர்த்தி செய்ய முன்வந்து அநுக்ரஹித்தாலல்லாது—இந்த பிராம்மண்யத்தைப் புதுப்பிக்க உள்ள அஸ்திவாரக் கார்யமாகிய—பிரும்மசர்யஸ்தாபனங்களை எவராலும் முடிக்க முடியாது. ஸ்ரீ தாடங்கப் பிரதிஷ்டா கார்யம் முடிந்துவிட்டபடியால் இனி ஆச்ரமஸ்தாபனங்களை நிறை வேற்றுவதற்கு சுமார் 5-வருஷ காலங்கள் ப்ரயத்தனப் படுவதாக ஸங்கல்பம் செய்வது உசிதமான தர்மம் ஆகும் என்று எண்ணப் படுகிறது. ஜீவ்யகாலத்தை செலவழித்து ஈடுபடும் தொண்டர் பலர் உண்டு.

பிராம்மணர்களால் பலன் என்ன ?

இவ்விதம் ஏற்படும் பிராம்மணர்கள் உலகம் முழுவதும் குறைந்தது நம் பரதகண்டம் முழுவதும் ஸர்வஜனங்களுக்கும் ஸகலவேத சாஸ்த்ரங்களிலும் பலபாஷைகளிலும் பல உலக ஞான சாஸ்த்ரங்களிலும் பலதொழில்களிலும் சிறந்த வித்தையைக் குறைந்த செலவில் புகட்டிவருவார்கள். இல்லறத்தில் களைத்தவர்களுக்கு வேதாந்த உபதேசம் செய்துவருவார்கள். இராஜ்யம் ஒழுங்குபெறும்படி மன்னர்களுக்குப் புத்தி புகட்டிவருவார்கள். தங்கள் நடைத்தையினால் ஸர்வஜனங்களும் மேன்மையான கௌரவமான வைதிகவாழ்க்கையை அநுஷ்டித்து ஆத்மக்ஞானம் பெறுவதற்கு ஸாக்ஷியாக நிற்பார்கள். தபஸையே தனமாகக் கொண்டு திரவியத்தில் ஏழைகளாக இருந்து, பரமபுருஷார்த்தத்தையே விளக்கிக் கொண்டு ஆத்மஞானிகளாக நாட்டுபக்தர்களுக்கு பலவிதத்திலும் லௌகிகம், வைதிகம் இருவழியிலும் ஆயுள்காலம் முழுவதும் உதவிபுரிந்து வருவார்கள். இழந்த தனமாகிய —ரிஷிகளால் அளிக்கப்பட்ட பிதுரார்ஜிதயப்பொருளைப் பெற்றுக்களிப்பது பிரும்மசரிய வாழ்க்கையாலேயே !! விழித்துக் கொள்ளுங்கள் ! யோஜியுங்கள் !! ஆச்ரமம் ஸ்தாபியுங்கள்!!!

ஸாரம். இரங்காச்சார்யன்.

பஞ்சமர்களின் ஸமீபத்தில் செல்வது.

தற்காலம் ஸ்வராஜ்யம் என்னும் லௌகிக சுகத்தைப் பெறுவதற்காக பஞ்சமர்களை அந்தணர் முதலியவர்கள் தொட்டாகவேண்டும் என்ற ஓர் தப்பான அபிப்பிராயத்துடன் சிலர் பிரசாரஞ் செய்துவருகிறதாகத் தெரிகிறது. அம்மாதிரியாகப் பிரசுரஞ்செய்வோர் சாஸ்திரங்களையும் புண்யபாபங்களின் ஸ்வ

ரூபத்தையும் அறியாமலேயே அவ்விதம் கூறுகின்றரென நினைக்கின்றோம். சண்டாளனுக்கு 30 அடி ஸமீபத்திற்குள் சென்றால் தோஷம் ஏற்படுகிறதென்பது எல்லா சாஸ்திரங்களின் நிச்சயமான தாத்பர்யம். அவ்விதம் ஸமீபத்தில் சண்டாளன் வருவானுகில் அவனும் தோஷத்திற் குள்ளாகிறான். பரமசிவனுடைய பரிபூரண அருள்பெற்ற நந்தனாரும் திருப்புங்கூரில் தான் ஆலயத்திற்குள் செல்லாது வெளியிலிருந்து ஈசனுடைய தர்சனத்தை பிரார்த்திக்க ஈசுவரனும் தன்னை மறைத்துக்கொண்டிருந்த நந்தியைச்சற்று விலகியிருக்கக் கட்டளையிட்டார். தில்லையிலும் நந்தனார் பெருமாள் வேதகோஷங்கள் ஒலிக்கின்ற வேதியர்களின் திருவீதிகளைக்கண்டு அங்கு செல்லாது தூர நின்றார். வேதியர்கள் அவர் ஓர் மஹானென்பதையறிந்து அவரையணுகுங்காலத்தில் அன்னவர் அவ்வேதியர்களைப் பணிந்து "ஸ்வாமீ நான் ஓர் சண்டாளனாதலால் என் ஸமீபத்தில் வந்து எனக்கு பாபத்தைக்கொடுக்காதீர்கள்" என்று வேண்டிக்கொண்டார். இவ்விதம் கூறிவிட்டு தானும் சற்று விலகி நின்றார். இவ்விதம் தன் குலாசாரத்தை யனுஷ்டித்து பக்திசெய்த நந்தனாருக்கு ஸ்ரீபரமேசுவரன் மோக்ஷம் கொடுத்தருளினார் நமக்கு ராஜ்யத்தினும் ஈசனுடைய கட்டளையான வேதசாஸ்திர நெறி பெரிது. தொடுவதினாலும் ஸமீபத்தில் செல்வதினாலும், கண்டவிடத்தில் தின்பதினாலும், ஜாதிமுறையை விட்டு ஸம்பந்தம் செய்வதினாலும் ஸ்வயராஜ்யம் கிடைத்துவிடாது. அப்படி இவைகளால் கிடைத்தாலும் சாஸ்திரகுலாசாரங்களை இழந்து நாம் நாஸ்திகர்களாகி கிடைக்கும் ராஜ்யசுகம் நமக்கு வேண்டாம். இதுகாறும் பஞ்சமர்களும் மற்றவர்களும் வெகு ஒற்றுமையுடன் வாழ்ந்து ஒருவருக்கொருவர் பிராணனையும் கொடுத்து உதவிபுரிந்து வந்திருக்கிறார்கள. இப்போது புதிதாக கிருஸ்துவர்களையும் வெள்ளைக்காரர்களையும் பார்த்து அந்த மேனாட்டு வாஸனையினால் புதிய துர்க்கதிகளைக்கொண்டு பஞ்சமர்களுக்கு இருக்கும் சிரத்தையைக் குலைத்து அவர்கள் மனதைப் புண்படுத்திக்கொண்டு வீண் கஷ்டங்களுக்கு ஆளாகாமலிருப்போமாக. ஒன்றாய்த்தொட்டும் புரண்டுகொண்டு ஒன்றாகக்குடித்

துக்களித்தும் வரும் இங்கிலீஷ்காரர்களுக்கும் ஜர்மனியார்களுக்கும் சண்டை ஏற்படவில்லையா? நம்முடைய சாஸ்திரங்கள் பஞ்சமர் முதலியவர்களை வெகு அன்புடன் நடத்தும்படிக்கு சொல்லியிருக்கிறது. அவர்கள் தீனர்களாயிருக்குமிடங்களில் அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்க எல்லாவித முயற்சிகளையும் செய்வோமாக. சாஸ்திரவிதிகளை மீறி கிட்டப்போய்த் தொட்டுக்கொண்டு இருவரும் பாபத்திற்கு உள்ளாகாமலிருப்பார்களென்று நம்புகிறோம்.

நம்பெரியோர்களின் காலத்தில் இருந்தவிதமாக ராஜ்யம் தர்மராஜ்யமாகும்படியாக மனோவாக்காயமென்னும் திருகரணங்களாலும் ஸ்ரீசர்வேச்வரனை நம் பாரதநாட்டினர் யாவரும் பிரார்த்திப்போமாக.

யாஜுஷ உபாகர்மம்.

இவ்வருஷத்திய யாஜுஷ உபாகர்மம் எப்பொழுது செய்வது சாஸ்திர சம்மதமென்று வினவும் கடிதத்தை சென்ற 24-வது சஞ்சிகையில் எல்லாரும் கண்டிருக்கலாம். அதற்கு என்சிற்றறிவிற்கு எப்படி சமாதானத்தை எழுதவந்ததாவது:- நமது பரமாசார்யாளுடைய அனுக்கிரஹத்தைப் பெற்ற ஆர்ய தர்மத்தில் நாமும் ஓர்விஷயத்தை எழுதினால் அவ்வனுக்கிரஹம் கிடைக்காதா? என்கிற வேண்டுதலால் தான் எழுதலானேன்.

இந்த வருஷம் சிராவணத்துக்கு முக்யகாலமான ஆவணி மீ௴ சுக்கிராஸ்தமனமாயிருப்பதால் எப்பொழுது சிராவணம் செய்வது சாஸ்திரசம்மதமாயிருக்கும்? என்றல்லவோ கேள்வி அதற்கு ஜோதிஷ கிரந்தத்தில் காலாமிருதம் என்கிற புஸ்தகத்தில் சொல்லுகிறார்.

श्रावण्यां गुरुशुक्रयोर्विमलयोः कुर्यादुपाकर्म तत्
कुर्युर्वाखिलबह्वृचः श्रवणभे सिंहं गते भास्करे ।
मासे कर्कटकेऽपि मौढ्यरहिते शाखेश्वराणां रवे-
स्संक्रान्तौ ग्रहणे न कार्यमथवा तत्प्रोष्ठपद्यां चरेत् ॥

ஶ்ராவணமாதத்தில் குரு அஸ்தமன மில்லாம விருக்கும்பொழுது திருவோண நக்ஷத்திரத்தில் ருக்வேதிகளும், அம்மாதத்திலேயே சுக்கிராஸ்தமனமில்லாதபொழுது யஜுர்வேதிகளும் அங்காரக அஸ்தமனமில்லாதபொழுது ஸாமவேதிகளும் புத அஸ்தமனமில்லாதபொழுது அதர்வணவேதிகளும் உபாகர்மத்தைச் செய்யவேண்டும், ஸூர்யன் ஸிம்மராசியில் இருக்கவேண்டுமென்பது நர்மதாநதிக்கு வடக்கேயுள்ள தேசத்தின் ஆசாரம். அதற்குத்தெற்கிலுள்ள நம் தேசங்களுக்கு ஸூரியன் கடகராசியில் இருந்தாலும் சாந்திரமானமாக சிராவணமாதமே போதும். சிராவணதினத்தில் சூர்யஸங்கிரமணமாவது சந்திரகிரஹணமாவது இருந்தால் அடுத்த ப்ரோஷ்டபதமாதத்தில் செய்யவேண்டியது என்றுகூறி அடுத்த சுலோகத்தால் விசேஷ விதியைத் தெரிவிக்கிறார்.

दोषोऽयं सम एव चेदनधिकेऽनल्पश्च मासद्वये
तत्र श्रावणमास एव विधिवत्कुर्यादुपाकर्म तत् ।
कर्मोत्सर्जननामकं तदपि वा पूर्वौषधीनां तदा
प्राकट्यं यदि नास्ति चेदथ चरेत् मासे नभस्ये तदा ॥

சிராவணபாத்திரபத மாஸங்களில் கீழ்ச்சொன்ன தோஷங்கள் அதிகம் குறைவு என்றில்லாமல் ஸமமாயிருந்தால் முக்கிய காலமான பலமுள்ள சிராவண மாதத்திலேயே செய்யவும் உத்ஸர்ஜனகர்மாவைப் புஷ்யமாக மாஸங்களில் தோஷமில்லாத காலத்தில் செய்யவும். தோஷம் ஸமமாயிருந்தால் புஷ்யத்தி

லேயே செய்யவும், என்று கூறி சிராவணமாஸத்தில் பூர்வஸஸ்யங்களான கம்பு கார் முதலானவை உற்பத்தியாகாதிருந்தால் பாத்ரபதமாஸத்திலேயே செய்யவேண்டும், என்று கால இலக்ஷணத்தையும் தெரிவித்தார்.

முதல் சுலோகத்தில் "गुरुशुक्रयोर्विमलयोः" என்று குருசுக்கிராஸ்தமனமில்லாத காலத்தில் ருக் யஜுர்வேதிகள் உபாகர்மம் செய்ய வேண்டும் என்றவிஷயம் பிரதமோபகர்மத்திற்காக என்று காச்யப வசனத்தை வியாக்கியானத்தில் எடுத்துக் காட்டி யுள்ளார்.

गुरुभार्गवयोर्मौढ्ये बाल्ये वा वार्धकेऽपि च ।
तथाधिमासे संसर्पे मलमासेषु च द्विजः ।
न कुर्यादाद्युपाकर्म कृतं कर्म च निष्फलम् ॥

வைத்தியநாததீக்ஷிதரும்,

"पर्वण्यौदयिके कुर्याच्छ्रावणं तैत्तरीयकाः ॥"

என்றுரைத்திருப்பதால் சிராவணமாதமே தமக்கு சம்மதமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

श्रावण्यामेव कारयेत् ।

என்று ஆபஸ்தம்பரும் சொல்லியிருப்பதால், தோஷாதிகள் சொன்னதெல்லாம் பிரதமோபாகர்மத்திற்கே என்று தோன்றுகிறது. லௌகிக திருஷ்டாந்தத்திலும் விவாஹம் உபநயனம் முதலிய சடங்குகளில் மாங்கல்யதாரணத்திற்கும் பிர்ம்மோபதேசத்திற்கும் நாள் நக்ஷத்திரங்கள் கவனிக்கிறார்களேயொழிய அடுத்ததினம் முதற்கொண்டு நடைபெருகிற ஔபாஸனம், ஸமிதாதானம் முதலானவைகளுக்கு காலசுத்தம் கவனிக்கிறார்களா? மாரணயோகமாயிருந்தாலும் செய்கிறார்களல்லவா? அதைப்போல் துவிதியாதி உபாகர்மங்களுக்கு தோஷ

மாயிருந்தாலும் சிராவணமாதமே போதும். தோஷத்திற்கு சாந்தியைச் செய்து உபாகர்மாவை நடத்தவேண்டும்.

சென்ற பிரமாதீச வருஷத்தில் இம்மாதிரியே சுக்கிர அஸ்தமனமும் சங்கிரமணமும் வந்தபொழுது ஆடிமாதத்தில் சில பேர் உபாகர்மத்தை நடத்த இதையறிந்த சிலபண்டிதர்கள் துண்டுப் பத்திரிகை மூலமாய் “अन्यथाकृतमकृतं” என்று மறு மாதத்திலும் நடத்தும்படி விதித்தார்கள். ஆகையால் இவ்வருஷத்தில் ஆடிமாதம்பிரதமோபகர்மாவையும் சிராவணத்திற்கு முக்கியகாலமான ஆவணி மாதத்தில் துவிதீயாதி யாஜுஷ உபாகர்மாவையும் செய்வது சாஸ்திர சம்மதமாயும் அனுஷ்டானத்திற்கு ஒத்ததாகவும் இருக்குமென்று எண்ணி எழுதத் துணிந்தேன்.

ஓர் வீட்டில் புத்திரனுக்கு சிராவணம் நடக்கும்போது பிதா சிராவணம் செய்து கொள்ளாமலிருக்கலாமா? என்று பாமரஜனங்கள் சொல்லலாம். இரண்டு பேரும் சேர்ந்து செய்துகொள்ளக் கூடிய காலத்திலேயே பிதாவுக்கு ஜ்ஞாதிப் பிரயுக்தமான விருத்திவந்தால் செய்யாமலில்லையா? அப்பொழுது புத்திரனுக்கு எப்படியும் அத்யயன ஆரம்பம் செய்து தானே தீரவேண்டும். அதுபோல் செலவை பொருட்டாயெண்ணுமல் சாஸ்திர வச்யர்களான உத்தமர்கள் புத்திரனுடைய பிரதம சிராவணத்தை ஆடியிலும், தான் ஆவணி மாதத்திலும் நடத்தவேண்டியது தான்.

“शीतांशोरमृतार्पणं”

என்பதுபோல் பலஉயர்ந்த பண்டித சிரோமணிகளால் அலங்கரித்துவருகிற ஆர்யதர்மத்திற்கு என்னுல் எழுதப்பட்ட இந்த விஷயம் களங்கம்போல் விளங்குமென்றுலும்

“मलिनमपि हिमांशोर्लक्ष्मलक्ष्मीं तनोति”

என்கிற காளிதாஸமஹாகவியின் வாக்கைப் போற்றியே எழுதினேன்.

வி. உமாமகேசுவரசாஸ்திரி.

குறிப்பு:— சிறிதும் தோஷமற்ற சாஸ்திரங்களிற் கூறப்பட்டகாலம் இருக்குங்கால் அதைவிலக்கி தோஷமுள்ள காலமான ஆவணி மாதத்தில் சாந்தியை செய்துகொண்டு, செய்ய வேண்டுமென்பது சரியல்ல

मुक्त्वा भाद्रपदाषाढौ श्रावण्यामेव कारयेत् ॥

என்ற இவ்வசனத்தில் "சிராவண்யாமேவாகாரயேத்" என்பதற்கு பாத்திரபத ஆஷாடங்களிலும் தோஷமிருந்தால் அவைகளைவிட்டு சிராவணமாசத்தில் செய்யவேண்டு மென்று கருத்தேயல்லாமல், அவற்றில் தோஷமில்லாதிருப்பினும் தோஷமுள்ள சிராவணத்திற்றான் செய்யவேண்டுமென்றகருத்தல்ல. இவர் அபிப்பிராயப்படி எப்பொழுதும் த்விதீயாதி உபாகர்மங்கள் எவ்விததோஷமிருந்தாலும் சிராவணத்திலேயே செய்ய வேண்டுமென்கிற அபிப்பிராயம் ஸ்மிருதிக்காரர்களுக்கு மிருக்மாகில், "பாத்திரபத ஆஷாடங்களை விலக்கி" என்று கூறவேண்டாம். ஏனெனில், பாத்திரபதாஷாடத்தில் எப்பொழுதாகிலும் பிரஸக்தியிருந்தால் நிஷேதிப்பது உசிதமாகும். இவர் சித்தாந்தப்படி ஒருஸமயமும் பிரசக்தி யில்லாமலிப்பதால் அவ்வாக்கியம் உபயோகமற்றதாகும். ஆகையால், மேல்கூறிய வண்ணம் அர்த்தம் செய்து கொள்வதே உசிதமென கொள்ளற்பாலது. அன்றியும் நிஷேதத்தைப் போதிக்கும் இரண்டு விதிகளுக்கும் ஏகவாக்கியதையாகப்பொருட்படுத்துவதும் சாஸ்திரவிரோதமாதலால் அவ்விதம் கூறுவதும் சரியல்ல. ஆகவே இவ்வருடத்திய யஜுர்வேத உபாகர்மங்களனைத்தும் ஆடிமாதமே செய்யவேண்டும். இவ்விஷயத்தைக்குறித்து விபரமாய் அறியவேண்டுவோர் ஆரியதர்மம் 25-வது ஸஞ்சிகையைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ப—ர்